இந்திய உச்ச நீதிமன்றம்

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு

உரிமையியல் மேல்முறையீடு எண் *8069/2019*

(சிறப்பு அனுமதி மனு (உ) எண் 11852/2019-லிருந்து எழுகிறது)

எம். உறரிஉறரசுதன் ... மேல்முறையீட்டாளர்

-எதிர்-

ஆர். கார்மேகம் மற்றும் பலர் ... எதிர்மேல்முறையீட்டாளர்கள்

தீர்ப்புரை

மாண்புமிகு நீதியரசர் திரு. மோகன் எம். சந்தானகவுடர்:

அனுமதி வழங்கப்பட்டது.

2. முதலேற்பு வழக்கு எண் 186/2016-இல் வெற்றியுறாத பிரதிவாதிகளால் (இதிலுள்ள எதிர்மேல்முறையீட்டாளர்கள்) தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டை அனுமதித்து, மேல்முறையீட்டு வழக்கு (எம்.டி.) எண் 143/2018-இல் மெட்ராஸ் உயர் நீதிமன்ற மதுரை அமர்வால் பிறப்பிக்கப்பட்ட 29.3.2019-ஆம் தேதியிடப்பட்ட இறுதி தீர்ப்புரை மற்றும் உத்தரவிலிருந்து தற்போதைய மேல்முறையீடு எழுகிறது. இதிலுள்ள மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட இழப்பீட்டிற்கான உரிமை வழக்கானது, மதுரை, முதன்மை கூடுதல் மாவட்ட நீதிபதியால் 3.4.2018-ஆம் தேதியிட்ட உத்தரவு மூலம் தீர்ப்பாணையிடப்பட்டிருந்தது.

3. இந்த மேல்முறையீட்டில் சுருக்கமான வினா யாதெனில், தமிழ்நாடு சொத்து (சேதம் மற்றும் நட்டம் தடுப்பு) சட்டம் 1992-இன் (சுருக்கமாக "சட்டம்") துணைகொண்டு பார்த்தால், மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட இழப்பீட்டிற்கான உரிமை வழக்கு நிலைக்கத்தக்கதா? இச்சட்டம் உரிமையியல் நீதிமன்றத்தின் அதிகாரவரம்பை

நீக்குகிறதா? என்பதை இது சார்ந்துநிற்கிறது. இது குறித்து மேல்முறையீட்டாளரால் சொல்லப்பட்டவாறு வழக்கின் சுருக்கமான பொருண்மைகள் பின்வருமாறு:

3.1. மேல்முறையீட்டாளர் மதுரையில் ஒரு உணவகம் நடத்திவருகிறார். அவர், அவருடைய தந்தைக்கு சொந்தமான ஒரு மனைக்கு பக்கத்திலுள்ள நிலத்தில் மனை ஒன்றை வாங்கி, அதில் அவர் 2014-ஆம் ஆண்டில் கட்டுமானப் பணியைத் தொடங்கினார். மேல்முறையீட்டாளரின் தந்தையின் சொத்துக்கு எளிதாகச் சென்றுவருவதை தடுத்து, மேல்முறையீட்டாளரின் சொத்துக்கு முன்பாக 1-ஆவது எதிர்மேல்முறையீட்டாளர் ஒரு கட்டுமானத்தை கட்டத் தொடங்கியதால், மேல்முறையீட்டாளரின் தந்தை உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக, 1-ஆவது எதிர்மேல்முறையீட்டாளருக்கெதிராக மு.வ. எண் 783/2014-ஐ தாக்கல் செய்தார். மேற்படி உரிமை வழக்கில் அதுகாறும் உள்ள நிலையைப் பேணுவதற்காக உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தாலும், 1-ஆவது எதிர்மேல்முறையீட்டாளர் அதைப் பொருட்படுத்தாமல் அவருடைய கட்டுமானத்தைக் கட்டிமுடித்தார். பின்பு, உரிமை வழக்கு தாக்கல் செய்ததால் மனக்குறையுற்று, 1-ஆவது எதிர்மேல்முறையீட்டாளர் சில அடியாட்களுடன் சேர்ந்து, மேல்முறையீட்டாளரின் சொத்தில் இருந்த சில கட்டுமானப் பொருட்களை சேதப்படுத்தி, ரூ. 2.27 இலட்சம் அளவிற்கு சேதத்தை ஏற்படுத்தினர். அதன்விளைவாக, மேல்முறையீட்டாளர் காவல் நிலையம் முன்பு முதல் தகவல் அறிக்கையைத் தாக்கல் செய்தார் மற்றும் 1-ஆவது எதிர்மேல்முறையீட்டாளர் மீது ஒரு குற்றம் பதிவு செய்யப்படலானது, மேலும், அதற்குப்பிறகு அவர், மேல்முறையீட்டாளரின் உணவகத்தின் கண்ணாடி காட்சி-பேழையில் கற்களை வீசி சேதப்படுத்தினார் மற்றும் சீருந்துவை உணவகத்திற்குள் ஓட்டிச்சென்று அதனுடைய தானியங்கி கண்ணாடி கதவை சேதப்படுத்தினார். 2-ஆவது மற்றும் 3-ஆவது எதிர்மேல்முறையீட்டாளர்கள், உணவகத்திற்குள் அத்துமீறி நுழைந்து, ரூ. 1 இலட்சத்திற்கும் அதிகமான பணத்தை எடுத்துச்சென்றனர்.

மேல்முறையீட்டாளர் காயமடைந்த அவருடைய பணியாளர்களுக்காக மருத்துவ செலவாக ரூ. 73,000/- செலவுசெய்தார், பின்னர் மு.வ. எண் 186/2016-ஐ தாக்கல் செய்தார்.

3.2. மேல்முறையீட்டாளருக்கு ஏற்பட்ட சேதத்திற்கு ரூ. 18,28,941/-ஐ ஆண்டொன்றுக்கு 9% வட்டியுடன் உரிமை வழக்கு தாக்கல் செய்த நாளிலிருந்து இழப்பீடு கைவரப்பெறும் நாள்வரை விகிதப்படியான செலவுத்தொகையுடன் இழப்பீடுபெற உரிமையுடையவர் என தீர்ப்பளித்து, விசாரணை நீதிமன்றம் உரிமை வழக்கில் அதாவது, மு.வ. எண் 186/2016-இல் தீர்ப்பாணை பிறப்பித்தது. உரிமை வழக்கின் நிலைக்குந்தன்மை என்பது விசாரணை நீதிமன்றம் முன்பு ஒரு பிரச்சினையேயல்ல.

3.3. உயர் நீதிமன்றம், மேல்முறையீட்டில், உரிமை வழக்கின் நிலைக்குந்தன்மை, தேவையான தரப்பினர்களை சேர்க்காமை மற்றும் வழக்கு மூலம் இயல்பாக வந்தடைதல் ஆகியவை குறித்து பரிசீலனைக்கான கூறுகளை வனைந்தனர், உரிமை வழக்கு, தேவையான தரப்பினர்களைச் சேர்க்காததற்காகவும் மற்றும் உரியகாலத்திற்கு முன்னரே தாக்கல் செய்யப்படாததாலும், அது கேடார்ந்ததல்ல என தீர்ப்பளிக்கப்பட்டபோதிலும், உரிமை வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்ற காண்முடிவின் அடிப்படையில் மட்டுமே தீர்ப்பாணை நீக்கறவு செய்யப்பட்டது. சட்டத்தில் உரிமையியல் அதிகாரவரம்பின்மீது வெளிப்படையான தடை ஏதுமில்லை என உயர் நீதிமன்றம் கண்டறிந்தது. ஆயினும், சட்டத்தின் பிரிவுகள் 10 மற்றும் 11-இலும், தமிழ்நாடு சொத்து (சேதம் மற்றும் நட்டம் தடுப்பு) விதிகள் 1994-இன் (சுருக்கமாக "விதிகள்"), விதி 4-இலும் சொத்து சேதத்திற்கான இழப்பீட்டை கோருவதற்காக ஒரு குறிப்பிட்டமுறை அச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதால், இழப்பீடு கோருவதற்கான மற்ற முறைகள்யாவும் மறைமுகமாக நீக்கப்பட்டுள்ளன, இவ்வாறாக உரிமையியல் நீதிமன்றத்தின் அதிகாரவரம்பு உட்கிடையாக

நீக்கம் செய்யப்பட்டுள்ளது. மேல்முறையீட்டாளர் மனக்குறையுற்று, தற்போதைய மேல்முறையீட்டைத் தாக்கல் செய்தார்.

4. உரிமையியல் நீதிமன்றத்தின் அதிகாரவரம்பின்மீது வெளிப்படையான தடை ஏதுமில்லை என உயர் நீதிமன்றம் சரியாக தீர்மானித்திருந்தபோதிலும், அது, உரிமையியல் நீதிமன்றத்தின் அதிகாரவரம்பை, சட்டம் உட்கிடையாக நீக்கியுள்ளது எனத் தவறாக தீர்ப்பளித்துவிட்டது என்றும், உண்மையிலேயே, அத்தகைய அதிகாரவரம்பானது, சட்டத்தின்கீழ் வகைசெய்யப்பட்டுள்ள பரிகாரங்களுடன் ஒத்திசைவாக இருக்கிறது என அதனுடைய வகைமுறைகள் சுட்டிக்காட்டின என மேல்முறையீட்டாளருக்காக முன்னிலையான கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் திரு. வி. கிரி வாதிட்டார்.

4.1. கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் முதலில் சட்டத்தின் பிரிவு 7(4)-ஐ குறிப்பிட்டார், அது, பிரிவு 7-இன் கீழ் செலுத்தப்படவேண்டியதாக நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்ட இழப்பீடானது, ஒரே விடயம் தொடர்பான பின்னிட்ட உரிமையியல் வழக்கு ஒன்றில் இழப்பீடு தீர்வளிக்கும் சமயத்தில் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படவேண்டும் என்று வகைசெய்கிறது. இவ்வாறு பிரிவு 7(4) உரிமை வழக்கு தாக்கல் செய்கின்ற சாத்தியத்தினை அங்கீகரித்து, இழப்பீடு தீர்வளிக்க உரிமையியல் நீதிமன்றத்தின் அதிகாரவரம்பை உட்கிடையாக அங்கீகரிக்கிறது என அவர் வாதிட்டார். பிரிவு 7-இன் சட்டம், குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம், 1973 (சுருக்கமாக "கு.வி.மு.ச.")-இன் பிரிவு 357-ஐ அப்படியே சொற்பிறழாது எடுத்தியம்புகிறது. இது இழப்பீடு செலுத்த உத்தரவிடும் இக்குற்றவியல் நீதிமன்றத்தின் அதிகாரம் தொடர்பானது என்றாலும், இழப்பீட்டிற்காக பின்னிட்டு ஓர் உரிமையியல் வழக்கைத் தாக்கல் செய்வதற்கும் விவரித்துரைக்கிறது.

4.2. இரண்டாவதாக, உரிமையியல் நீதிமன்றத்தின் அதிகாரவரம்பு பிரிவு 14-இன் கீழும் காக்கப்பட்டது என்று வாதிட்டு, சட்டத்தின் பிரிவு 14-க்கு எங்களுடைய கவனம்

ஈர்க்கப்பட்டது. மேலும் இது சட்டத்திற்கு புறத்தே தொடரப்படும் நடவடிக்கைகளையும் காக்கிறது. கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் **துலாபாய் -எதிர்- மத்தியப் பிரதேச மாநில அரசு,** *1968 (3)* எஸ்.சி.ஆர். *662* என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தின் அரசமைப்பு நீதியராயத்தின் தீர்முடிவைக் குறிப்பிட்டு, உரிமையியல் நீதிமன்றத்தின் அதிகாரவரம்பு நீக்கப்பட்டுள்ளதென உடனடியாக முடிவு செய்யப்படவேண்டியதில்லை என வலியுறுத்தினார்.

5. அதற்கு மாறாக, எதிர்மேல்முறையீட்டாளருக்கான கற்றறிந்த வழக்குரைஞர் சட்டமும், விதிகளும், தன்னிறைவுகொண்ட சட்டத்தை அமைத்து, தேவையான மறைமுகக்குறிப்பினால் உரிமையியல் நீதிமன்றத்தின் அதிகார வரம்பை நீக்கியுள்ளன என வாதிட்டார். விதிகள், இழப்பீட்டை தீர்மானித்து, கொடுப்பதற்காக ஒரு குறிப்பிட்ட அதிகாரமைப்பை விதி உருவாக்குகின்றன, ஆதலால் *(மேற்கண்ட)* **துலாபாய்** என்ற வழக்கின் தீர்முடிவு முற்றிலும் பொருந்தக்கூடியது, அதில் ஓர் இயற்றுச்சட்டத்தில் நிறைவான மற்றும் போதுமான பரிகாரம் குறிப்பிட்டு வகைசெய்யப்பட்டு, அது சாதாரணமாக ஓர் உரிமையியல் நீதிமன்றத்தின் செயல்பாடுகளுடன் இணைந்ததாக இருக்கிறபோது, உரிமையியல் நீதிமன்றத்தின் அதிகாரவரம்பு நீக்கப்படுவதாக முடிவுசெய்யப்படவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது என அவர் சமர்ப்பித்தார். மேலும், இழப்பீட்டை தீர்வளிக்க உரிமையியல் நீதிமன்றத்தின் அதிகாரவரம்பு அங்கீகரிக்கப்படவேண்டுமெனில், சட்டம் மற்றும் விதிகளின் செயல்திட்டமானது தேவைக்குமேல் அளிப்பதாக இருக்கும் எனவும் அவர் வாதிட்டார்.

6. இழப்பீட்டிற்கான ஓர் உரிமை வழக்கை, உரிமையியல் நீதிமன்றத்தின் அதிகாரவரம்பின்பேரில் ஏற்றுக்கொள்ள சட்டத்தின் கீழ் வெளிப்படையான தடையேதுமில்லை என்பது பிரச்சினைக்குரியதாயில்லை. மேலே கூறப்பட்டவாறு, நாம் தீர்மானிக்கவேண்டியதெல்லாம் உரிமையியல் நீதிமன்றத்தின் அதிகாரவரம்பானது

அவசியமான மறைமுகக்குறிப்பால் தடைசெய்யப்பட்டுள்ளதா? என்பதாகும். (மேற்கண்ட) **துலாபாய்** என்ற வழக்கில் வகுத்துரைக்கப்பட்டுள்ள கோட்பாடுகள் இதனைப் பொறுத்தளவில் ஏற்புடையவையே. தனிவகையாக அமைக்கப்படும் தீர்ப்பாயங்கள் மூலம் உரிமையியல் நீதிமன்றத்தின் அதிகாரவரம்பை தடைசெய்யும் வினா குறித்து விவாதிக்கையில், நீதிமன்றத்தால் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை நிறைவுசெய்தாலன்றி, அத்தகைய தடையை உடனடியாக ஏற்கவேண்டியதில்லை என இந்நீதிமன்றம் தீர்மானித்தது. எங்கள் முன்பான கேள்வியைத் தீர்மானிக்கும்பொருட்டு, (மேற்கண்ட) **துலாபாய்** என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தில் வகுத்தமைக்கப்பட்டுள்ள பின்வரும் நிபந்தனைகளை மட்டுமே நாங்கள் குறிப்பிடுகிறோம்.

> "..... (1) ஓர் இயற்றுச்சட்டம், சிறப்பு தீர்ப்பாயங்களின் உத்தரவுகளுக்கு இறுதித்தன்மையை வழங்குகிறவிடத்து, ஓர் உரிமை வழக்கில் சாதாரணமாக உரிமையியல் நீதிமன்றம் என்ன செய்யுமோ, அதைச் செய்வதற்கு போதுமான பரிகாரமிருப்பின், உரிமையியல் நீதிமன்றங்களின் அதிகாரவரம்பு நீக்கப்படவேண்டியதாக தீர்ப்பளிக்கப்படவேண்டும். ஆயினும், குறிப்பிட்ட சட்டத்தின் வகைமுறைகள் நீதித்துறையின் நடைமுறையிலுள்ள அடிப்படை கோட்பாடுகளுக்கிணங்கவில்லை என்றோ, சட்டப்படியான தீர்ப்பாயம் அதனுடன் இணக்கமாக செயலாற்றவில்லை என்றோ இருக்குமிடத்து, அத்தகைய வகைமுறை, அவ்வழக்குகளை நீக்கிவிடாது.
>
> (2) நீதிமன்றத்தின் அதிகாரவரம்பில் வெளிப்படையான தடை இருக்குமிடத்து, வழங்கப்படும் பரிகாரங்களின் நிறைவான தன்மையையும் அல்லது போதிய தன்மையையும் கண்டறிய குறிப்பிட்ட சட்டத்தின் செயல்திட்டத்தை ஆராய்வது பொருத்தமானதாக இருக்கலாம், ஆனால்

அது உரிமையியல் நீதிமன்றத்தின் அதிகாரவரம்பை நிலைநிறுத்தும் முடிவல்ல.

வெளிப்படையான தடை இல்லாதவிடத்து, சட்டப்படியான பொருள்விளக்கத்தை கண்டறிய குறிப்பிட்ட சட்டத்தின் பரிகாரங்களையும், செயல்திட்டத்தையும் ஆராய்வது அவசியமாகிறது மற்றும் விசாரணையின் முடிவு அறுதியான முடிவாக இருக்கலாம். பிந்தைய நேர்வில், சட்டமானது ஒரு சிறப்பு உரிமையை அல்லது ஒரு கடப்பாட்டை உருவாக்கி, அவ்வுரிமையையோ அல்லது கடப்பாட்டையையோ தீர்மானிப்பதற்காக வகைசெய்து, மேலும் மேற்படி உரிமை அல்லது கடப்பாடு பற்றிய அனைத்து கேள்விகளும் அவ்வாறு அமைக்கப்பட்ட தீர்ப்பாயங்களால் தீர்மானிக்கப்படுதல்வேண்டும் என்று வகுத்துரைக்கிறது. மேலும் உரிமையியல் நீதிமன்றங்களின் செயல்பாட்டுடன் சாதாரணமாக இணைந்திருக்கும் பரிகாரங்கள் மேற்படி சட்டத்தினால் வகுத்துரைக்கப்பட்டவையா, இல்லையா என்பதை பார்ப்பது அவசியமாகும்..

* * *

(7) மேலே குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் பொருந்தினாலன்றி, உரிமையியல் நீதிமன்றத்தின் அதிகாரவரம்பை தடைசெய்யும் முடிவை உடனடியாக ஏற்கவேண்டியதில்லை."

(வலியுறுத்திக் கூறப்படுகிறது)

6.1. இவ்வாறு உரிமையியல் நீதிமன்றத்தின் அதிகாரவரம்பு நீக்கப்பட்டுள்ளதாக முடிவு செய்யப்படவேண்டுமென்பது அவசியமென்றால் ஓர் உரிமை வழக்கில், உரிமையியல் நீதிமன்றம் சாதாரணமாக என்னசெய்யுமோ, அதற்கு போதிய இறுதி பரிகாரத்தை சட்டம் வகைசெய்கிறதா? என்பதை நாம் இன்றியமையாததாகத் தீர்மானிக்கவேண்டும். சட்டத்தின் செயல்திட்டமும், விதிகளும் இதன் அடிப்படையில் ஆராயப்படவேண்டும்.

7. சட்டத்தின் பிரிவு 1, குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம் குறித்து கூறுகிறது மற்றும் பிரிவு 2 பொருள்வரையறைகள் குறித்து விவாதிக்கிறது. முக்கியமாக, உட்பிரிவு (4), "சொத்து என்பதை, உட்பிரிவு (ஏ) முதல் (ஜெ) வரையிலான கூறுகளின் கீழ் பட்டியலிடப்பட்ட பொருட்கள் உட்பட ஒரு நபரால் உரிமையுடைமையாக வைத்துக்கொள்ளப்படும் அல்லது ஒரு நபரின் உடைமையிலிருக்கும் அல்லது கட்டுப்பாட்டிலிருக்கும் அசையும் சொத்து அல்லது அசையாச் சொத்து அல்லது இயங்குமுறையான எதுவும், எடுத்துக்காட்டாக மத்திய மற்றும் மாநில அரசு, உள்ளாட்சி அதிகாரமைப்பு எதுவும் அல்லது நிலையம், வணிக நிறுவனம் அல்லது தொழில் நிறுவனம் எதுவும் என்று பொருள்வரையறுக்கிறது. பிரிவுகள் 3, 4, 5 ஆகியவை சட்டத்தின் கீழ் தண்டனைக்குரிய குற்றங்கள் குறித்து வகுத்தமைக்கிறது, அதேவேளையில் பிரிவு 6 பிணை வழங்குதல் தொடர்புடையதாகும்.

7.1. எங்களது கருத்துமாறுபாடான விவாதத்திற்கு மையமாக விளங்கும் பிரிவு 7 மீண்டும் எடுத்துரைக்கத்தக்கதாகிறது:

> "7. **இழப்பீடு செலுத்துவதற்கான ஆணை -** (1) இச்சட்டத்தின்படி குற்றச் செயலொன்றுக்காக அபராதத்தைத் தண்டனையாக விதிக்குங்கால், நீதிமன்றம், தீர்ப்புரை வழங்குகையில் வசூலிக்கப்படும் தண்டத்தொகை முழுவதும் அல்லது அதன் பகுதி எதுவும் -

(அ) குற்ற வழக்கு நடவடிக்கையில் முறையாக ஏற்பட்ட செலவுகளை கொடுத்துத் தீர்ப்பதற்கும்;

(ஆ) அக்குற்றச்செயலால் ஏற்பட்ட நட்டம் அல்லது ஊறு எதற்குமான, இழப்பீட்டை நபரெவருக்கேனும் செலுத்துவதற்கும்;

(இ) சாலை, பாலம், இயற்கையான அல்லது செயற்கையான நீர்வழிப் போக்குவரவுக்குரிய கால்வாய் எவையும் உள்ளடங்கலாக உள்ள சொத்தினை நேர்விற்கேற்ப முன்பிருந்த நிலையில் அமைத்துத் தருவதற்கு அல்லது அதை மீட்டளிப்பதற்குப் பயன்படுத்தப்படவேண்டுமென்று ஆணையிடலாம்.

(2) மேல்முறையீட்டிற்குட்பட்ட வழக்கொன்றில் அபராதம் விதிக்கப்படுமாயின், மேல்முறையீட்டினை முன்னிடுவதற்கு அனுமதிக்கப்பட்ட காலம் முடிவடைவதற்கு முன்னரோ அல்லது மேல்முறையீடானது முன்னிடப்பட்டு, அம்மேல்முறையீட்டில் தீர்ப்பளிப்பதற்கு முன்னரோ அத்தகைய பணஞ்செலுத்துதல் கூடாது.

(3) இந்தப் பிரிவின்படியான ஆணையொன்றை மேல்முறையீட்டு நீதிமன்றமோ அல்லது உயர் நீதிமன்றமோ தனது சீராய்வு அதிகாரங்களைச் செலுத்தும்போதும் பிறப்பிக்கலாம்.

(4) ஓரே விடயப்பொருள் குறித்த பின்னிட்ட உரிமையியல் வழக்கு எதிலும் இழப்பீடு வழங்குங்காலத்தில், நீதிமன்றம், இந்தப் பிரிவின்படி இழப்பீடாகச் செலுத்தப்படும் அல்லது வசூலிக்கப்படும் தொகை எதையும் கணக்கில் எடுத்துக்கொள்ளுதல் வேண்டும்.

(5) வேறுவிதமாக வகை செய்யப்பட்டவாறல்லாமல், ஒரு நீதிமன்றம் தண்டனை விதித்து, அதில் அபராதம் ஒரு பகுதியாக அமையாதபோது, நீதிமன்றம் தீர்ப்புரை வழங்குகையில், எந்தச் செயலுக்காகக் குற்றஞ்சுமத்தப்பட்ட நபருக்கு அவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டுள்ளதோ, அந்தச் செயலின் காரணமாக நட்டம் அல்லது ஊறு எதனாலும் அவதியுற்றவருக்கு இழப்பீடு வாயிலாக செலுத்த ஆணையில் குறித்துரைக்கப்படலாகும் அத்தொகையைச் செலுத்துமாறு குற்றஞ்சுமத்தப்பட்டவருக்கு ஆணையிடலாம்."

(வலியுறுத்திக் கூறப்பட்டது)

7.2. பிரிவு *7(1)*, சட்டத்தின் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் எதனையும் நீதிமன்றம் விசாரித்து, குற்றவாளியென தீர்ப்பு வழங்கிய பின்பு அபராத தண்டனை விதிக்கிறவிடத்து, அது, சட்டக்கூறு *(ஆ)*-இல் குறிப்பிட்டவாறு குற்றத்தினால் ஏற்படும் நட்டம் அல்லது ஊறு எதற்குமான இழப்பீட்டினைச் செலுத்துவதற்காக அத்தகைய அபராதத்தை பகுதியாகவோ அல்லது முழுவதுமாகவோ பயன்படுத்தப்படவேண்டுமென்று மற்றவற்றுக்கிடையில் உத்தரவிடலாம் எனத் தெளிவாக வகைசெய்கிறது. அதேசமயத்தில் ஒரு நீதிமன்றம் சட்டத்தின்கீழ் உள்ளடக்கியுள்ள சிறைத்தண்டனையை மட்டுமே விதிக்கிறதெனில், நீதிமன்றம் குறையுற்ற தரப்பினருக்கு தனியாக இழப்பீடு செலுத்த குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு உத்தரவிடலாம் என்பதை உட்பிரிவு *(5)* வகைசெய்கிறது.

7.2.1. பெருநகர தலைமைக் குற்றவியல் நடுவர் அல்லது அமர்வு நீதிமன்றத்திற்கு கீழமைந்த நீதிமன்றம் எதுவும், இச்சட்டத்தின்கீழ் குற்றச்செயல்கள் எவற்றையும் விசாரணை செய்யமுடியாதென பிரிவு *8* குறிப்பிடுகிறது என்பது இக்கட்டத்தில் குறிப்பிடத்தக்கதாகும்.

7.2.2. பிரிவு *7(3)*-இன்படி, உட்பிரிவுகள் *(1)* மற்றும் *(5)*-இன் கீழ் இரண்டு உத்தரவுகளை உள்ளடக்குகின்ற பிரிவு *7*-இன் கீழ் ஓர் உத்தரவை, மேல்முறையீட்டு நீதிமன்றமோ அல்லது சீராய்வு அதிகாரத்தைச் செலுத்தும்வகையில் உயர் நீதிமன்றமுமோ பிறப்பிக்கலாம். மிகவும் சிக்கலானதாயினும், உட்பிரிவு *(4)*, ஒரே விடயம் தொடர்பான பின்னிட்ட உரிமையியல் வழக்கில், உரிமையியல் நீதிமன்றம் இழப்பீட்டினை தீர்வளிக்குமெனில், அது, சட்டத்தின் பிரிவு *7*-இன் கீழ் இழப்பீடாகச் செலுத்தப்படும் அல்லது வசூலிக்கப்படும் தொகை எதையும் கணக்கில் எடுத்துக்கொள்ளுதல்வேண்டும் என்பதை குறிப்பாக வகைசெய்கிறது.

7.3. பிரிவு *9*-ஐ பார்ப்போமானால், இது இச்சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும் எவ்வாறிருப்பினும், அரசியல் கட்சியாலோ, வகுப்பு, மொழி அல்லது இனக் குழுவினாலோ ஏற்பாடு செய்யப்படும் ஊர்வலம், கூட்டம் கூடுதல், கூட்டம், கிளர்ச்சி, ஆர்ப்பாட்டம் ஆகிய எவற்றின்போதும் அல்லது பிற நடவடிக்கை எவற்றின்போதும் இச்சட்டத்தின்படி தண்டிக்கத்தக்க குற்றச் செயலொன்று செய்யப்பட்டிருக்குமிடத்து, அக்குற்றச் செயல் அந்த அரசியல் கட்சியாலோ அல்லது அக்குழுவினாலோ செய்யப்பட்டிருப்பதாகவும் நீதிமன்றம் அனுமானித்தல்வேண்டும், அது, சொத்து எதற்கும் விளைவிக்கப்படும் சேதம் அல்லது நட்டத்திற்கான இழப்பீட்டை, இச்சட்டத்தின் வகைமுறைகளின்படியும் அதன் கீழான விதிகளின்படியும் செலுத்துவதற்குரியவராயிருத்தல்வேண்டும் என்று வகைசெய்கிறது.

7.4. பிரிவு *10(1)* சேதம் அல்லது நட்டத்திற்காக இழப்பீடு கோருதல் தொடர்புடையதாகும், அது சேதம் அல்லது நட்டத்தினால் பாதிக்கப்படும் நபரால் அல்லது பிரிவு *2(4)*-இன் கூறுகள் *(ஏ)* முதல் *(ஜெ)* வரையிலானவற்றில் குறிப்பிடப்பட்ட அதிகார அமைப்பினால் அதிகாரமளிக்கப்பெற்ற அலுவலர் எவராலும் செய்யப்படலாம். இழப்பீட்டுக்

கோரிக்கைக்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய படிவத்தில் இருக்கவேண்டும் என்று உட்பிரிவு *(2)* வகைசெய்கிறது.

7.5. சொத்துக்கு விளைவிக்கப்பட்ட சேதம் அல்லது நட்டத்திற்கான இழப்பீட்டுக் கோரிக்கை ஒவ்வொன்றும் வகுத்துரைக்கப்படலாகும் அதிகாரமைப்பிடம் செய்யப்படுதல் வேண்டும் என்று பிரிவு *11(1)* வகைசெய்கிறது. உட்பிரிவு *(2)* இழப்பீட்டின் அளவினைக் குறித்து தீர்மானிக்கையில் வகுத்துரைக்கப்படும் அதிகாரமைப்பால் பரிசீலிக்கப்படவேண்டிய காரணிகளைக் குறித்து வகைசெய்கிறது மற்றும் உட்பிரிவு *(3)* அத்தகைய அதிகாரமைப்பு விண்ணப்பத்தைத் தீர்வு செய்கையில் வகுத்துரைக்கப்பட்ட நடைமுறையைப் பின்பற்றுதல்வேண்டுமென வகைசெய்கிறது. வகுத்துரைக்கப்பட்ட அதிகாரமைப்புக்கு, உறுதிமொழியின்பேரில் சாட்சியம் எடுத்தல், சாட்சிகள் முன்னிலையாவதை வலியுறுத்துதல், ஆவணங்களையும், சான்றுப்பொருள்களையும் கண்டெடுத்து முன்னிலைப்படுத்துதல் ஆகியவற்றின்பொருட்டு வகுத்துரைக்கப்படலாகும். அத்தகைய பிற நோக்கங்களுக்காகவும், *1908*-ஆம் ஆண்டு உரிமையியல் விசாரணைமுறைச் சட்டத்தில் *(*சுருக்கமாக *"*உ.வி.மு.ச.*")* வகைசெய்யப்பட்டுள்ளவாறு, ஓர் உரிமையியல் நீதிமன்றத்தின் அதிகாரங்களை உட்பிரிவு *(4)* அளிக்கிறது.

7.6. பிரிவு *11*-இன் கீழ் வகுத்துரைக்கப்பட்டுள்ள அதிகாரமைப்பு, தீர்வளிக்கப்படவேண்டிய இழப்பீட்டுத் தொகையைத் தீர்மானித்த பின்னர், அத்தொகைக்கான சான்றிதழ் ஒன்றை மாவட்ட ஆட்சியருக்கு வழங்கலாம், அவர், நில வருவாய் நிலுவையைப் வசூலிப்பதைப்போன்ற அதேமுறையில் அதனை வசூலித்தல்வேண்டும் என்று சட்டத்தின் பிரிவு *12* வகைசெய்கிறது. பிரிவு *12*-அ-இல் வகுத்துரைக்கப்பட்டுள்ளவாறு அத்தகைய அதிகாரமைப்பிடத்தில் மேல்முறையிடலாம் என்பதை வகைசெய்து, பிரிவு *11*-இன் கீழ் உத்தரவு ஒன்றிற்கெதிராக மேல்முறையிடும்

முறை குறித்து விவாதிக்கிறது. மேல்முறையீட்டு அதிகாரமைப்பின் முடிவே இறுதியானதாகும் மற்றும் அம்முடிவிற்கு யாதொரு நீதிமன்றத்திலும் கேள்விகேட்க இயலாது என்பதை உட்பிரிவு 2 குறிப்பாக வகைசெய்கிறது. பிரிவு 13 இச்சட்டத்தின்கீழ் விதிகளை வனைய மாநில அரசுக்கு அதிகாரம் வழங்குகிறது.

7.7. பிரிவு 14 என்பது காப்பு வகைமுறையாகும். இந்த வகைமுறையை சுற்றியுங்கூட முக்கியமானவை வலம் வருவதால் நாங்கள் இதை மீண்டும் எடுத்து இயம்புகிறோம்:

> "14. **காப்பு** - இச்சட்டத்தின் வகைமுறைகள், அவ்வப்போது நடைமுறையிலுள்ள பிற சட்டம் எதனோடும் இருக்கவேண்டுமேயன்றி அதன் மதிப்பை குன்றச் செய்வனவாக இருத்தலாகா மற்றும் இதில் அடங்கியுள்ள எதுவும், இச்சட்டம் தவிர, நபர் எவருக்கேனும் எதிராக புலனாய்வு மூலமாகவோ அல்லது பிறவாறோ தொடுக்கப்படக்கூடிய நடவடிக்கை எதிலிருந்தும் அந்நபருக்கு விலக்களித்தல் ஆகாது.

7.8. சட்டத்தின் கடைசி வகைமுறையான பிரிவு 15, 1982-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுச்சொத்து (அழித்தல் மற்றும் நட்ட தடுப்பு) சட்டத்தை நீக்கறவு செய்கிறது.

8. சட்டத்தின் பிரிவு 13-இன் கீழ் அதிகாரங்களைச் செலுத்தும்வகையில், மாநில அரசால் விதிகள் வனையப்பட்டுள்ளன. பிரிவு 2(4)-இன் கூறுகள் (ஏ) முதல் (ஜெ) வரையினானவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரமைப்பிற்குச் சொந்தமானதாகவோ அல்லது அதன் உடைமையிலுள்ளதாகவோ அல்லது அதன் கட்டுப்பாட்டிலோ இருக்கும் சொத்திற்கு சேதம் அல்லது நட்டத்திற்கான இழப்பீட்டை எவர், எம்முறையில் கோரலாம் என்பதை விதி 3 வகுத்தமைக்கிறது. முக்கியமாக, விதி 4 வருவாய் நிர்வாகத்திற்கான ஆணையர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரமைப்பு எதுவும், விதி 3-இன் கீழ் செய்யப்படும் இழப்பீட்டு கோருரிமைகளைத் தீர்மானிக்க தகுதியுடையன எனக்

குறிப்பிடுகிறது. பொது சொத்திற்கு ஏற்படுத்தப்பட்ட சேதம் அல்லது நட்டத்திற்கான இழப்பீட்டளவு குறித்து உரிய அதிகாரமைப்பின் முடிவு இறுதியானதாகும் மற்றும் அம்முடிவிற்கு யாதொரு நீதிமன்றத்திலும் கேள்வி கேட்கமுடியாது என உட்பிரிவு *(2)* வகைசெய்கிறது. பொது சொத்திற்கு ஏற்படுத்தப்பட்ட சேதம் அல்லது நட்டத்திற்கான இழப்பீட்டை தீர்மானிக்கையில், ஒருசில கூடுதல் காரணிகள் பரிசீலிக்கப்படவேண்டுமென உட்பிரிவு *(3)* வகுத்தமைக்கிறது.

8.1. விதிகள் *5* முதல் *10* வரையிலானவை, குறைபாடுகளை நிவர்த்தி செய்தல், எதிர்வழக்குரை தாக்கல் செய்தல், தரப்பினர்களுக்கு அறிவிப்பு அனுப்புதல், அழைப்பாணைகள் விடுத்தல் மற்றும் தேவைப்பட்டால் வழக்குரைஞர்களை முன்னிலையாகச் செய்தல் ஆகியவை உட்பட விசாரணை நடைமுறையின் பல்வேறு அம்சங்கள் குறித்து விவாதிக்கின்றன. விதி *11*, சேதமடைந்த சொத்தை ஆய்வு செய்ய விசாரணை அதிகாரிக்கு அதிகாரமளிக்கிறது. அதேவேளையில், விதி *12* சேதமடைந்த அசையும் சொத்தை அதிகாரமைப்பு முன்னிலையில் முன்னிலைப்படுத்த அனுமதிக்கிறது. விதி *13* விசாரணை அதிகாரியின் பயணப்படி குறித்து கையாளுகிறது. விதி *14* தேவைப்படும் நபர் எவரையும் சுருக்கமுறை விசாரணை செய்வதற்கு வகைசெய்கிறது. விதி *15* விசாணை அதிகாரி ஒவ்வொரு சாட்சியின் சாட்சியத்தின் சாராம்ச விவரக்குறிப்பு ஒன்றை பதிவு செய்தல்வேண்டும் என தெரிவிக்கிறது. விதி *16*, விசாரணை அதிகாரி விசாரணைக்கு தொடர்புடைய எவ்விடயத்தையும் குறித்து சிறப்பு அறிவை பெற்றிருக்கும் நபர்களிடமிருந்து உதவியை நாடலாம் என வகைசெய்கிறது. விதிகள் *17* முதல் *19* வரையிலானவை விசாரணை அதிகாரி தீர்மானிக்கப்படவேண்டிய வாதக்கூறுகளின் பதிவை வனைந்து, விசாரணை நடவடிக்கைகளின் சுருக்க குறிப்பேட்டை பராமரித்து, ஒவ்வொரு வாதக்கூறுகளின்பேரில் அவருடைய காண்முடிவுகளை சுருக்கமாகப் பதிவது மற்றும்

அத்தகைய காண்முடிவிற்கான காரணங்களைப் பதிவு செய்தல்வேண்டும் எனக் கோருகின்றன. உ.வி.மு.ச.-இன் விண்ணப்பத்துடன் தொடர்புடைய விதி 20, 24.10.1994ஆம் தேதியிட்ட அ.ஆ. நிலை எண் 1285, உள்துறை (நீதிமன்றம் IV)-இன்படி நீக்கப்பட்டுவிட்டது. கடைசி விதியான விதி 21, இழப்பீடு வசூலிக்கும் முறை குறித்து விவரிக்கிறது.

9. மேலும், 1992-ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட இச்சட்டம், தொடக்கத்தில் பொது சொத்திற்கு ஏற்படுத்தப்படும் சேதம் மற்றும் நட்டம் குறித்தானதே எனக் குறிப்பிடுவது முக்கியமாகும். இச்சட்டம் பொதுசொத்து அல்லாத பிற சொத்துக்கும் இழப்பீடு வழங்குவது குறித்து, 9.8.1994 அன்று தமிழ்நாடு அரசு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்ட தமிழ்நாடு பொது சொத்து (சேதம் மற்றும் நட்டம் தடுப்பு) சட்டம், 1994-இன் மூலம் திருத்தப்பட்டது. இச்சட்டத்தின்கீழ் வனையப்பட்ட விதிகள், 9.8.1994 அன்று அதாவது சட்ட திருத்தத்திற்கு முன்பு நடைமுறைக்கு வந்தது. 24.10.1994-ஆம் தேதியிடப்பட்ட அ.ஆ. நிலை எண் 1285, உள்துறை (நீதிமன்றம் IV) மூலம் ஒருசில திருத்தங்கள் விதிகளில் பின்னிட்டு செய்யப்பட்டிருந்தாலும், விதிகளை திருத்தம் செய்ததில் மாநில அரசு கவனக்குறைவாக நடந்து, பொதுச்சொத்து அல்லாத பிற சொத்து தொடர்பான இழப்பீட்டை மதிப்பிட்டு, அதைக் கோருவதற்கான நடைமுறை எதனையும் வகைசெய்ய தவறிவிட்டது எனத் தெரிகிறது. எடுத்துக்காட்டாக, ஏற்கெனவே விவாதிக்கப்பட்டவாறு, இழப்பீடு கோர அதிகாரமைப்பைக் குறித்துரைக்கும் விதி 3, பொது சொத்து தொடர்பான இழப்பீட்டிற்கான விண்ணப்பங்களை மட்டுமே தொடர்ந்து கையாண்டுவருகிறது. அதேபோல், எந்த அதிகாரமைப்பு முன்பு இழப்பீடு கோரப்படவேண்டும் என்பதை வகுத்துரைக்கும் விதி 4(1) தனிப்பட்ட சொத்துக்கு ஏற்படுத்தப்படும் நட்டத்திற்கான இழப்பீடுகளைக் கோர எவர் முன்பு விண்ணப்பிக்கவேண்டும் என்பதை தெளிவுப்படுத்தவில்லை. அதேசமயத்தில்

விதி 4(2) தனிப்பட்ட சொத்துக்கான இழப்பீடுகள் குறித்த முடிவு எதனையும் குறிப்பிடாமல், பொது சொத்துக்கு ஏற்படுத்தப்படும் சேதம் அல்லது நட்டத்திற்கான இழப்பீட்டை மதிப்பிடுதல் இறுதியானதென குறிப்பிடுகிறது. அதேபோல்தான் விதி 4(3)-ம் பொது சொத்திற்கு ஏற்படுத்தப்படும் சேதம் அல்லது நட்டத்திற்கான இழப்பீடு குறித்த மதிப்பீட்டை கவனம் கொள்கிறதேயன்றி, தனிப்பட்ட சொத்தைப் பொறுத்தவரையில் இழப்பீடுகள் எவ்வாறு மதிப்பிடப்படவேண்டும் என்பதை விவாதிக்கவில்லை. இவ்வாறாக மாநில அரசு, விதிகளை திருத்தப்பட்ட சட்டத்துடன் இணக்கமுற கொண்டுவந்து, அவற்றை முறையாக அமல்படுத்துவதை எளிதாக்க விதிகளை திருத்தம்செய்ததில் கவனக்குறைவாக இருந்துவிட்டது என்பது வெறும் விதிகளை முழுவதுமாக வாசிக்கையில் தெளிவாகிறது.

10. ஆயினும், விதிகள், பொது மற்றும் தனிப்பட்ட சொத்துக்கு சேதம் அல்லது நட்டத்திற்கான இழப்பீடு கோருரிமை நடைமுறையை விரிவாக வகைசெய்கிறது என நாங்கள் அனுமானித்தாலும், சட்டத்தின் செயல்திட்டம், உரிமையியல் நீதிமன்றத்தின் அதிகாரவரம்பை நீக்குவதாக கருத்துக்கொள்ளவில்லை என்ற மேல்முறையீட்டாளருக்கான கற்றறிந்த மூத்த வழக்குரைஞரின் வாதத்தில் நாங்கள் வலிமையைக் காண்கிறோம்.

11. மேலே குறிப்பிடப்பட்டவாறு, விதிகளை, சொற்களின் நேர்பொருள்கொண்டு படிக்காமல், விரிவானபொருள்கொண்டு படித்தோமானால் சட்டம், விதிகளுடன் இரு வழிகளில் இழப்பீட்டைத் தீர்வளிப்பதற்காக வகைசெய்கிறது. முதலாவதாக, இதை, இச்சட்டத்தின் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் எதற்காகவுமான விசாரணையின் முடிவில் தீர்வளிக்கலாம் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர்மீது விதிக்கப்பட்ட அபராதத் தொகையிலிருந்து செலுத்துமாறு உத்தரவிடலாம். இது, கு.வி.மு.ச. பிரிவு 357-இன் கீழ் இழப்பீடு தீர்வளிக்கும் குற்றவியல் நீதிமன்றத்தின் அதிகாரத்தைப் போன்றதாகும்.

இரண்டாவதாக, விதிகளின் கீழ் குறிப்பிடப்பட்டவாறு ஒரு சுருக்கமான விசாரணைக்குப்பின், பிரிவு 10-இன் கீழானதாகக் கருதப்படும் ஒரு விண்ணப்பத்தின்பேரில் இழப்பீடு தீர்வளிக்கப்படலாம். இது, ஏதோ ஒருவிதத்தில், அதன் கீழ் இழப்பீடு கோருவதற்காக, நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 1986 (சுருக்கமாக "1986 சட்டம்")-இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சுருக்கமான நடைமுறையைப் போன்றதாகும். சொத்திற்கு ஏற்பட்ட நட்டம் மற்றும் சேதத்திற்கான இழப்பீடு கோர, சட்டமும், விதிகளும் ஒரு குறிப்பிட்ட பரிகாரத்தை வகைசெய்கின்றன என்பதை இது சுட்டிக்காட்டுகிறது. இழப்பீட்டிற்கான உரிமை வழக்கைத் தீர்மானிக்க, ஒருங்கியல்வான அதிகாரவரம்பை உரிமையியல் நீதிமன்றம் பெற்றிருப்பதாகக் கூறமுடியாது என்ற இந்த அடிப்படையில்தான் எதிர்மேல்முறையீட்டாளருக்கான கற்றறிந்த வழக்குரைஞர் வாதிட்டார்.

12. அத்தகைய ஒரு வாதம் இருப்பினும், அது நிராகரிக்கப்படுவதற்குரியதாகும். இச்சட்டத்தின் கீழ் ஏதேனும் குற்றத்திற்கான விசாரணைக்குப்பின், பிரிவு 7-இன் கீழ் குற்றவியல் நீதிமன்றத்தால் இழப்பீடு குறித்த தீர்வளிப்பு அல்லது வகைமுறை என்ற அம்சத்திற்கு நாங்கள் முதலில் எங்களது கவனத்தைத் திருப்புகிறோம். உரிமையியல் வழக்கை விசாரிக்கும் நீதிமன்றம், இழப்பீடு தீர்வளிக்குமெனில், அது சட்டத்தின் பிரிவு 7-இன் கீழ் இழப்பீடாகச் செலுத்தப்படும் அல்லது வசூலிக்கப்படும் தொகையைக் கருத்திற்கொள்ளவேண்டியதாகிறது என்கிறவிடத்து, சட்டத்தின்கீழ் ஒரே விடயம் தொடர்பாக குற்றவியல் நடவடிக்கைகளுக்கு பின்னிட்டு, ஓர் உரிமையியல் வழக்கு தாக்கல் செய்யப்படுவதற்கான சாத்தியக்கூறை வகைமுறை தெளிவாகவே அங்கீகரிக்கிறது என்பது தெளிவாகிறது. உரிமையியல் நீதிமன்றத்தின் ஒருங்கியல்பான அதிகாரவரம்பை நீக்கிவிட்டால், சட்டம் பின்னிட்டு ஓர் உரிமையியல் வழக்கு தாக்கல் செய்வதை அனுமதிக்கிறது என்னும் காரணம் நிலைகொள்ளாது.

13. மேலும், சட்டத்தின் பிரிவு 10 உடனிணைந்த விதிகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இழப்பீடு கோரும் கேள்விமுறையற்ற பரிகாரமுங்கூட, இழப்பீடுகளுக்கான ஓர் உரிமை வழக்கைத் தாக்கல் செய்வதை தடைசெய்யவில்லை. இது தொடர்பாக, சட்டத்தின் பிரிவு 14 முக்கியத்துவம் வாய்ந்தது. இச்சட்டம், அவ்வப்போது நடைமுறையிலிருக்கும் பிற சட்டம் எதனோடும் சேர்ந்திருக்குமேயன்றி, அதன் மதிப்பை குறைப்பதாக இருக்காது என்பதை இது தெளிவாக வகைசெய்கிறது. இச்சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும், நபர் எவர்மீதும் இச்சட்டத்தைத் தவிர விசாரணை வாயிலாகவோ அல்லது பிறவாறோ தொடுக்கப்படும் நடவடிக்கைகளிலிருந்து அவருக்கு விலக்கு ஏதுமளிக்காது என்பதையும் இது வலியுறுத்துகிறது. நடைமுறையிலுள்ள "சட்டம்" என்பது பொது சட்டத்தையும் உள்ளடக்கியது, இதன்கீழ் தீங்கியல் குற்றம் தொடர்பான இழப்பீடு பரிகாரத்தைக் கோரலாம். அப்பரிகாரமும் ஓர் உரிமையியல் நீதிமன்றத்தை நாடியே பெறமுடியும். இவ்வாறாக, இச்சட்டம் பிரிவு 14-இன் மூலம், இழப்பீடுகளுக்கான ஓர் உரிமை வழக்கை ஏற்றுக்கொள்ள, உரிமையியல் நீதிமன்றத்தின் ஒருங்கியல்வான அதிகாரவரம்பை தெளிவாகவே அங்கீகரிக்கிறது என்பது தெளிவு.

14. இதுதொடர்பாக, சட்டப்பிரிவு 14-ஐ போன்றதொரு 1986-ஆம் ஆண்டின் சட்டப் பிரிவு 3-ஐ குறிப்பிடுவது பயனுள்ளதாகும், 1986-ஆம் ஆண்டின் சட்டம் நடைமுறையிலுள்ள பிற சட்டங்களின் மதிப்பைக் குன்றச்செய்யாது, அதற்கு துணைசெய்வதாக உள்ளது என இது வகைசெய்கிறது.

> "3. **பிற சட்டம் எதனுடைய மதிப்பைக் குன்றச் செய்யாத சட்டம்** - இச்சட்டத்தின் வகைமுறைகள் அவ்வப்போது நடைமுறையிலுள்ள பிற சட்டம் எதனுடைய வகைமுறைகளின் மதிப்பையும் குன்றச்செய்யாது, அதனோடு துணைநிற்றல்வேண்டும்."

14.1. நுகர்வோர் மன்றம் முன்பாக கிடைக்கக்கூடிய பரிகாரம், மனக்குறையுற்ற நபர் ஒருவருக்கு கிடைக்கக்கூடிய பல ஒருங்கியல்வான பரிகாரங்களுள் ஒன்றானதாகவே இருக்கலாம் என்பதை உறுதிசெய்ய இந்நீதிமன்றத்தால் பேரெண்ணிக்கையிலான சந்தர்ப்பங்களில் இந்த வகைமுறை பரிசீலிக்கப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, இந்நீதிமன்றம் **பயனீர் அர்பன் லேண்ட் மற்றும் இன்பிராஸ்டிரக்சர் லிமிடெட் -எதிர்- யூனியன் ஆ.ப் இந்தியா** *(நீ.பே.ம. (உ) எண் 43/2019, 9.8.2019* அன்று தீர்மானிக்கப்பட்டது*)* என்ற வழக்கில், பல்வேறு இயற்றுச்சட்டங்களான சட்டம் *1986*, வீடு நில உடைமைகள் *(*ஒழுங்குமுறை மற்றும் மேம்பாடு*)* சட்டம், *2016* மற்றும் நொடிப்பு நிலை மற்றும் வணிக நொடிப்புநிலை சட்டம், *2016* போன்றவற்றின் கீழ் அடுக்குமாடி கட்டிட ஒதுக்கீடு பெற்றவர்களின் பரிகாரங்கள் ஒத்தியங்குகின்றன என சமீபத்திலுங்கூட கருத்துரைத்தது. ஆயினும், எங்களது நோக்கங்களுக்காக, நாங்கள் உரிமையியல் நீதிமன்றத்தின் அதிகாரவரம்பின்போில், *1986*-ஆம் ஆண்டின் சட்டப்பிரிவு *3*-இன் செயல்விளைவினை ஆராய்வதற்கு எங்களை உட்படுத்திக்கொள்கிறோம். **கர்நாடக அரசு -எதிர்- விஷ்வபாரதி உறவுஸ் பில்டிங் கோ.ஆப். சொசைட்டி,** *(2003) 2* எஸ்.சி.சி. *412* என்ற வழக்கின் பின்வரும் விவாதம், எங்களை போதுமான அளவில் நிறைவுபடுத்தியது, இதில் *1986*-ஆம் ஆண்டின் சட்டம் உரிமையியல் நீதிமன்றத்தின் அதிகாரவரம்பை நீக்கவில்லை என இந்நீதிமன்றம் விளக்கியது:

> *"46.* சட்டப்பிரிவு *3*-இன் வகைமுறைகளின் காரணமாக, அதன்கீழ் வகைசெய்யப்பட்ட பரிகாரங்கள், பிற சட்டங்களின்கீழ் வகைசெய்யப்பட்டவற்றின் மதிப்பைக் குன்றச் செய்வன அல்ல என்பது தெளிவு. மேற்படி சட்டம் உரிமையியல் நீதிமன்றங்களின் அல்லது பிற

சட்டமுறை அதிகாரமைப்புகளின் அதிகாரவரம்பை நீக்காமல், துணைமையாக உள்ளன.

* * *

53. .....மேலும், முதன்மையாக மன்றங்கள்/ஆணையங்களின் அதிகாரவரம்பு என்பது இழப்பீட்டை வழங்குதலேயாகும். முறையீட்டாளர் ஒருவர் உறுத்துக்கட்டளை உத்தரவு ஒன்றைக் கோருவதாயிருந்தால், அவர் ஓர் உரிமையியல் நீதிமன்றத்தில் சிறந்த மற்றும் செயல்திறமிக்க பரிகாரத்தைப் பெறுவார் என உணருங்கால், அவர் மறுப்பிற்கிடமின்றி ஓர் உரிய உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்யலாம் அல்லது பிற இயற்றுச்சட்டங்களில் வகைசெய்யப்பட்டவாறு வேறு சில பரிகாரங்களுக்கான வழியை நாடலாம்."

(வலியுறுத்திக் கூறப்பட்டது)

14.2. இந்நீதிமன்றத்தால் **இந்திய மருத்துவ சங்கம் -எதிர்- வி.பி. சாந்தா,** *(1995) 6* எஸ்.சி.சி. *651* என்ற வழக்கில் அதனுடைய முந்தைய தீர்முடிவில் செய்யப்பட்ட பின்வரும் கருத்துரைகளையும் நாங்கள் குறிப்பிடுகிறோம், அதில், மருத்துவ கவனக்குறைவினால் பணியில் ஏற்பட்ட குறைபாடு குறித்த முறையீடுகள் குறித்து விவாதிக்க, நுகர்வோர் மன்றங்கள் தகுதியுடையனவாக இருந்தன எனத் தீர்மானிக்கையில், அது பின்வருமாறு கருத்துரைத்தது:

"37. .... சிக்கலான பிரச்சினைகளை உள்ளடக்கியிருக்கும் முறையீடுகளில் நிபுணர்களின் சாட்சியத்தைப் பதிவு செய்வதைக் கோரும்வகையில், முறையீட்டாளர் உரிய பரிகாரத்திற்காக உரிமையியல் நீதிமன்றத்தை அணுகுமாறு கேட்கப்படலாம். சட்டத்தின் பிரிவு *3*-இன் வகையங்கள்,

அவ்வப்போது சட்ட நடைமுறையிலுள்ள வேறேதேனும் சட்டத்தின் வகைமுறைகளின் மதிப்பைக் குன்றச் செய்யாமல், அதற்கு துணையாக நிற்கவேண்டும் என அச்சட்டம் வகுத்துரைத்து, தேவையான பரிகாரத்திற்காக உரிமையியல் நீதிமன்றத்தை அணுகும் நுகர்வோரின் உரிமையைப் பாதுகாக்கிறது....."

(வலியுறுத்திக் கூறப்பட்டது)

14.3. இதேபோன்றதொரு கருத்துரை, கையிலிருக்கும் சட்டம் தொடர்பாகவுங்கூட ஒரு களத்தினை தீர்மானிக்கிறது என்பதில் எங்களுக்கு ஐயப்பாடிற்குரிய எண்ணமில்லை. நடைமுறையிலுள்ள பிற சட்டங்களின் வகைமுறைகளின் மதிப்பைக் குன்றச்செய்யாது துணைமையாய் நிற்கும் சட்டத்தின் பிரிவு *14*, மனக்குறையுற்ற நபர் சட்டத்தின் பிரிவு *10*-இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பரிகாரத்தைப் பெற்று பயனடைவதற்குப் பதிலாக, உரிமையியல் நீதிமன்றத்தை அணுகி பரிகாரம் பெற விரும்பினால், அவ்வாறு செய்வதற்கு அனுமதிக்கிறது. சட்டத்தின் கீழ் இழப்பீட்டிற்கான கோருரிமை என்பது ஒரு கூடுதல் பரிகாரம் என்ற தன்மையிலேயே உள்ளது என்பது தெளிவு, அதே பரிகாரத்திற்காக ஓர் உரிமையியல் வழக்கைத் தாக்கல் செய்யுமிடத்தில் அதை நாடலாம்.

15. மேலும், சட்டத்தின் கீழ் இழப்பீட்டிற்காக கோருரிமையைத் தீர்மானிக்கும் வகுத்தமைக்கப்பட்ட அதிகாரமைப்பிற்கு உரிமையியல் நீதிமன்றத்தின் ஒருசில அதிகாரங்கள் அளிக்கப்பட்டிருந்தாலுங்கூட பிரிவு *10*-இன் கீழ் இழப்பீட்டிற்கான கோருரிமை, சுருக்கமுறை நடவடிக்கைகளின் மூலமே தீர்மானிக்கலாம் என்பதால் ஓர் உரிமையியல் நீதிமன்றத்தை நாடிச் சென்று, முழு வீச்சான விசாரணையின் மூலம் தீர்மானிக்கப்படும் பரிகாரங்களுக்கு இது ஒரு முழுமையான பதிலமைவாக இருக்காது என்பது தெளிவாகிறது.

16. சட்டம் மற்றும் விதிகளின் செயல் திட்டம் முழுவதையும் மதிப்பிட்டதன்பேரிலும், (மேற்கண்ட) **துலாபாய்** என்ற வழக்கில் வகுத்துரைக்கப்பட்ட ஆய்வுகளை ஆராய்ந்தும், ஓர் உரிமையியல் வழக்கில் ஓர் உரிமையியல் நீதிமன்றம் முன்பு இழப்பீடுகளுக்கான கோருரிமை தீர்மானிப்படுவதற்காக வரலாமேயொழிய, இச்சட்டம், அதற்குப் பதிலாக வராது, மேலும் பொது சட்டத்தின் கீழ் அதற்கான கோருரிமையை தடைசெய்யாது எங்களது ஆய்ந்தறிந்த கருத்தாகும். இதனைக் கருத்திற்கொண்டு, சட்டம், வெளிப்படையாகவோ அல்லது தேவையான மறைமுகக்குறிப்பினாலோ உரிமையியல் நீதிமன்றத்தின் அதிகாரவரம்பை நீக்கவில்லை, மேலும், மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட உரிமை வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என தீர்மானித்து, இதிலுள்ள எதிர்மேல்முறையீட்டாளர்களால் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டை அனுமதித்ததில் உயர் நீதிமன்றம் தவறிழைத்துவிட்டது என்னும் எதிர்க்கவியலாத முடிவினை நாங்களே எடுக்கிறோம்.

17. மேலே குறிப்பிட்டவாறு, விசாரணை நீதிமன்றம், உரிமை வழக்கு நிலைக்கத்தக்கது என தீர்மானித்து, தகுதிப்பாட்டின்மீது உரிமை வழக்கில் தீர்ப்பாணை பிறப்பிக்க முற்பட்டது. உ.வி.மு.ச.-இன் பிரிவு 96-இன் கீழ் உயர் நீதிமன்றத்தின் முன்பாக தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடு, உரிமை வழக்கின் நிலைக்குந்தன்மை தொடர்பான முதன்மையான வாதக்கூறின்பேரில்தான் தீர்மானிக்கப்பட்டது. உரிமை வழக்கு நிலைக்கத்தக்கது என்ற எங்களது காண்முடிவினைக் கருத்திற்கொண்டு, தகுதிப்பாட்டின்பேரில் முதல் மேல்முறையீட்டை விசாரிப்பதற்காக உயர் நீதிமன்றத்திற்கு வழக்கு திருப்பி அனுப்பப்படவேண்டும்.

18. அதற்கிணங்க, மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது, அதன் விளைவாக, உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புரை நீக்கறவு செய்யப்படுகிறது. மே.வ. (எம்.டி.) எண் 143/2018 என்ற முதலாம் மேல்முறையீட்டை தகுதிப்பாட்டின்பேரில் தீர்மானிப்பதற்காக உயர் நீதிமன்றத்திற்கு வழக்கு திருப்பி அனுப்பப்படுகிறது.

மாண்புமிகு நீதியரசர் திரு. மோகன் எம். சந்தானகவுடர்

மாண்புமிகு நீதியரசர் திரு. அஜய் ரஸ்தோகி

புது தில்லி,
17.10.2019.

.....

<u>உரிமைத்துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."